உ

திருச்சிற்றம்பலம்.

திருக்கானப்பேர் என்னும்

காளையார்கோவில்,

# தேவாரப்பதிகங்கள்.

இஃது

தேவகோட்டை ஜமீந்தார்.

மகா-௱-௱-ஸ்ரீ அள. அரு.

**ராமசாமிசெட்டியாரவர்கள்.**

வேண்டுகோளின்படி

சதாவதானம்

**சுப்பிரமணிய ஐயரால்.**

தமது

தேவகோட்டை,

"கலாதர அச்சுக்கூடத்தில்"

பதிப்பிக்கப்பட்டது.

1896

ROJA. MUTHIAH
ARTIST
KOTTAIYUR P.O.



காளையப்பர்.



சுவர்ணவல்லி.



திருச்சிற்றம்பலம்.

காளையார்கோவில் என்னும்,

# திருக்கானப்பேர்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்,

பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

பிடியெலாம்பின்செலப்பெருங்கைமாமலர்தழீஇ
விடியலேதடம்மூழ்கிவிதியினால்வழிபடுங்
கடியுலாம்பூம்பொழிற்கானப்பேரண்ணலின்
னடியலாலடைசரணுடையரோவடியரே. (க)

நுண்ணிடைப்பேரல்குனூபுரமெல்லடிப்
பெண்ணினல்லாளையோர்பாகமாய்ப்பேணினான்
கண்ணுடைநெற்றியான்கருதுகானப்பேர்
விண்ணிடைவேட்கையார்விரும்புதல்கருமமே. ( )

வாவிவாயத்தங்கியநுண்சிறைவண்டினங்
காவிவாய்ப்பண்செயுங்கானப்பேரண்ணலை
நாவிவாய்ச்சாந்துளும்பூவுளுஞானநீர்
தூவிவாய்ப்பெய்துநின்றாட்டுவார்தொண்டரே. (௩)

நிறையுடைநெஞ்சுளுநீருளும்பூவுளும்
பறையுடைமுழவுளும்பலியுளும்பாட்டுளுங்
கறையுடைமிடற்றண்ணல்கருதியகானப்பேர்
குறையுடையவர்க்கலாற்களைகிலார்குற்றமே. (௪)

ஏனப்பூண்மார்பின்மேலென்புபூண்டீறிலா
ஞானப்பேராயிரம்பேரினானண்ணிய
கானப்பேரூர்தொழுங்காதலார்தீதிலர்
வானப்பேரூர்புகும்வண்ணமும்வல்லரே. (௫)

பள்ளமேபடர்சடைப்பாற்படப்பாய்ந்தநீர்
வெள்ளமேதாங்கினான்வெண்மதிசூடினான்
கள்ளமேசெய்கிலார்கருதியகானப்பே
ருள்ளமேகோயிலாவுள்குமென்னுள்ளமே. (௬)

மானமாமடப்பிடிவன்கையாலலகிடக்
கானமார்கடகரிவழிபடுங்கானப்பே
ரூனமாமுடம்பினிலுறுபிணிகெடவெண்ணின்
ஞானமாமலர்கொடுநணுகுதனன்மையே. (எ)

வாளினான்வேலினான்மால்வரையெடுத்தநீண்
டோளினானெடுமுடிதொலையவேயூன்றிய
தாளினான்கானப்பேர்தலையினல்வணங்குவார்
நாளுநாளுயர்வதோர்நன்மையைப்பெறுவரே. (அ)

சிலையினான்முப்புரந்தீயெழச்செற்றவ
னிலையிலாவிருவரைநிலைமைகண்டோங்கினான்
கலையினார்புறவிற்றேன்கமழ்தருகானப்பேர்
தலையினல்வணங்குவார்தவமுடையார்களே. (கூ)

உறித்தலைச்சுரையொடுகுண்டிகைபிடித்துச்சி
பறித்தலும்போர்த்தலும்பயனிலைபாவிகாண்
மறித்தலைமடப்பிடிவளரிளங்கொழுங்கொடி
கறித்தெழுகானப்பேர்கைதொழல்கருமமே. (ய)

ஈட்டரத்தாடலர்சருதியகானப்பேர்
கோட்டகத்திளவரால்குதிகொளுங்காழியார்
நாட்டகத்தோங்குசீர்ஞானசம்பந்தன
பாட்டகத்திவைவல்லார்க்கில்லையாம்பாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்தி நாயனார்.

பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

---

தொண்டரடித்தொழலுஞ்சோதியிளம்பிறையுஞ்
சூதனமென்முலையாள்பாகமுமாகிவரும்
புண்டரிகப்பரிசாமேனியும்வானவர்கள்
பூசலிடக்கடனஞ்சுண்டகருத்தமருங் [ங்
கொண்டலெனத்திகழுங்கண்டமுமெண்டோளு
கோலநறுஞ்சடைமேல்வண்ணமுங்கண்குளிரக்
கண்டுதொழப்பெறுவதென்றுகொலோவடியேன்
கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே. (க)

கூதலிடுஞ்சடையுங்கோளரவும்விரவுங்
கொக்கிறகுங்குளிர்மாமத்தமுமொத்துனதா
ளோதலுணர்ந்தடியாருன்பெருமைக்குநினைந்
தார்வருகாவிரசுமோசையைப்பாடலுநீ
யாதலுணர்ந்தவரோடன்புபெருத்தடியே
னங்கையின்மாமலர்கொண்டென்கணதல்லல்கெடக்
காதலுறத்தொழுவதென்றுகொலோவடியேன்
கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே. (௨)

நாளுடைமாடனவேகன்மைதரும்பரனை
நம்பதமென்றுணர்வார்சொற்பதமார்சிவனைத்
தேனிடையின்னமுதைமற்றதனிற்றெளியைத்
தேவர்கணாயகனைப்பூவுயர்சென்னியனை
வானிடைமாமதியைமாசறுசோதியனை
மாருதமும்மனலும்மண்டலமும்மாய
கானிடைமாநடனென்றெய்துவதென்றுகொலோ
கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே. (௩)

**ROJA. MUTHIAH**
**ARTIST**
**KOTTAIYUR P. O.**
**RAMNAD DIST.**

செற்றவர்முப்புரமன்றட்டசிலைத்தொழிலார்
சேவகமுந்நினைவார்பாவகமுந்நெறியுங்
குற்றமிறன்னடியார்கூறுமிசைப்பரிசுங்
கோசிகமும்மரையிற்கோவணமும்மதளு
மற்றிகழ்திண்புயமுமார்பிடைநீறுதுதை
மாமலைமங்கையுமைசேர்சுவடும்புகழக்
கற்றனவும்பரவிக்கைதொழலென்றுகொலோ
கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே (௪)

கொல்லைவிடைக்கழகுங்கோலநறுஞ்சடையிற்
கொத்தலரும்மிதழித்தொத்துமதன்னருகே
முல்லைபடைத்தநகைமெல்லியலாளொருபால்
மோகமிருத்திலகுங்கூறுசெயொப்பரிசுந்
தில்லைநகர்ப்பொதுவுற்றாடியசீர்நடமுந்
திண்மழுவுங்கைமிசைக்கூரெரியுமடியார்
கல்லவடப்பரிசுங்காணுவதென்றுகொலோ
கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே. (௫)

பண்ணுதலைப்பயனார்பாடலுநீடுதலும்
பங்கயமாதனையார்பத்தியுமுத்தியளித்
தெண்ணுதலைப்பெருமானென்றெழுவாரவர்த
மேசறவும்மிறையாமெந்தையையும்விரவி
நண்ணுதலைப்படுமாறெங்ஙனமென்றயலே
நைகிறவென்னைமதித்துய்யும்வணம்மருளுங்
கண்ணுதலைக்கனியைக்காண்பதுமென்றுகொலோ
கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே. (சு)

மாவையுரித்ததள்கொண்டங்சமணிந்தவனை
வஞ்சமனத்திறையுநெஞ்சனுகாதவனை
மூவருருத்தனதாமூலமுதற்கருவை
மூசிடுமால்விடையின்பாகனையாகமுறப்
பாவகமின்றிமெய்யேபற்றுமவர்க்கமுதைப்
பானறுநெய்தயிரைந்தாடுபரம்பரனைக்
காவலெனக்கிறையென்றெய்துவதென்றுகொலோ
கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே. (எ)

தொண்டர்தமக்கெளியசோதியைவேதியனைத்
தூயமறைப்பொருளாநீதியைவார்கடனஞ்
சுண்டதனுக்கிறவாதென்றுமிருந்தவனை
யூழிபடைத்தவனோடொள்ளரியும்முணரா
வண்டனையண்டர்தமக்காகமநூன்மொழியு
மாதியைமேதகுசீரோதியைவானவர்தங் [லோ
கண்டனையன்பொடுசென்றெய்துவதென்றுகொ
கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே. (அ)

நந்தனைநாதமிருத்தோசையதானவனை
ஞானவிளக்கொளியாமூனுயிரைப்பிரியா
மாதனைமேதகுதன்பத்தர்மனத்திறையும்
பற்றுவிடாதவனைக்குற்றமில்கொள்கையனைத்
தூதனையென்றனையாடோழனைநாயகனைத்
தாழ்மகரக்குழையுந்தோடுமணிந்ததிருக்
காதனைநாயடியேனெய்துவதென்றுகொலோ
கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே,

கன்னலையின்னமுறைநக்கார்வயல்சூழ்தானப்
பெருறைகாலையையொண்சீருறைதண்டமிழா
லுன்னிமனத்தயராவுள்ளுருகிப்பரவு
மொண்பொழினாவலர்கோனாகியவாரூரன்
பன்னுமிசைக்கிளவிபத்திவைபாடவல்லார்
பத்தர்குணத்தினராயெத்திசையும்புகழ
மன்னியிருப்பவர்கள்வானினிழிந்திடினு
மண்டலநாயகராய்வாழ்வதுநிச்சயமே. (௰)

திருச்சிற்றம்பலம்.

---

சுந்தரமூர்த்தி நாயனார் இராமேச்சுரத்தை நீங்கித் திருச்சுழியலிலே போய்ச் சுவாமிதரிசனஞ் செய்து, திருப்பதிகம் பாடிக்கொண்டு, அங்கே இருக்கச் சுவாமி அவருக்குச் சொப்பனத்திலே காளைவடிவங்கொண்டு கையிலே பொற் செண்டும் முடியின்மேல் சுழியமும் உடையவராகித் தோன்றி, "நம்முடைய வாசஸ்தானம் கானப்பேர்" என்று சொல்லி மறைந்தருளினார். நாயனார் விழித்தெழுந்து, திரு

வருளை வியந்து, தாங்கண்ட சொப்பனத்தைத் தம் மோடுகூட வந்திருக்கின்ற சேரமான் பெருமாணுய ரூருக்குத் தெரிவித்து, திருச்சுழியலை நீங்கி, "தொண்டரடித்தொழலும்" என்று எடுத்து, "கண்டுதொழப்பெறுவ தென்றுகொலோ வடியேன் கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே" என்றுதிருப் பதிகத்தைப் பாடிக்கொண்டு திருக்கானப் பேருக்குப் போய், சுவாமிதரிசனஞ்செய்து திருப்பதிகம் பாடியருளினர்.

திருக்கானப்பேர்த் திருப்பதிகம்-உ

சுவாமிதிருநாமம் - காளையப்பர்.

தேவிதிருநாமம் - சுவர்னவல்லி

திருச்சிற்றம்பலம்.

---